REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2020 டிசம்பர் 30 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

வரு. 88 இல. 310 | December 30,Wednesday, 2020 | 20பக்கங்கள் | 30/-

தினகரனில் பஞ்சாங்கம்

தினகரன் பத்திரிகை வருடாந்தம் வெளியிடும் 2021ஆம் ஆண்டுக்கான பஞ்சாங்கம் நாளை 31 ஆம் திகதி பத்திரிகையுடன் வெளிவரும். இதில் இஸ்லாமிய, கிறிஸ்தவ விசேட தினங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.






இலங்கை பல்கலைக்கழக எழுதுவினைஞர், முகாமைத்துவ உதவியாளர், தொழிற்துறை சேவைகள் சங்கம் கொவிட் நிதியத்திற்காக 1.28 மில்லியன் ரூபாய் நன்கொடையை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் நேற்று பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து கையளித்த போது பிடிக்கப்பட்ட படம்.

## 2021 இல் கிராமிய பொருளாதார அபிவிருத்தியை கட்டியெழுப்ப 2 இலட்சம் சுயதொழில் வாய்ப்புகள்

### உருவாக்கப்படும் என்கிறார் ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ





விவசாயம், கால்நடை நிர்வாகம், மீன்பிடி, மின், எரிசக்தி உற்பத்தி, வீடுகளைச் சார்ந்த தொழிற்துறை உட்பட 2,00,000 சுயதொழில் வாய்ப்புக்களை உருவாக்க வசதிகளை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளது.

கிராமிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்தின் கீழ் சமுர்த்திப் பயனாளிகளின் ஜீவனோபாய நடவடிக்கையை மேம்படுத்தும் செயற்பாட்டின் தலைமைத்துவத்தை சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகளுக்கு வழங்கவுள்ளதாக பொருளாதார மீள் எழுச்சி மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பிலான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

### கொரோனா தொற்று; புதிய தேர்தல் முறை; மகா சங்கத்தினரின் எதிர்ப்பு;

## மாகாண சபை [illegible] குறிப்பிடப்படாது







கே அசோக்குமார்

கொரோனா தொற்றுப் பரவல் மற்றும் மஹா சங்கத்தினரின் வேண்டுகோள் உள்ளிட்ட நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பல்வேறு காரணங்களையும் கருத்தில் கொண்டு மாகாண

## ரூ.4000 மில்லியன் தேவைப்படும்

### தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் புஞ்சிஹேவா

லோரன்ஸ் செல்வநாயகம்

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு சுமார் 4,000 மில்லியன் ரூபா செலவாகுமென தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சி ஹேவா தெரிவித்துள்ளார். மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள அவர்,

06

## மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய காணி அபகரிப்பு முயற்சி

### நேற்று களத்தில் இறங்கிய சார்ள்ஸ் எம்.பி

மன்னார் குறூப் நிருபர்



மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு சொந்தமான காணியை 'மாதோட்ட' விகாரையின் பிக்கு அபகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் நேற்று காலை குறித்த பகுதிக்குச் சென்று பார்வையிட்டுள்ளார்.

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு சொந்தமான 5 ஏக்கர் காணி சைவ மங்கையர்

06

## திருவனந்தபுரம் நகராட்சி மேயராக 21 வயது இளம் யுவதி தெரிவு

### டுவிட்டரில் நாமல் ராஜபக்ஷ வாழ்த்து





கேரளாவின் மிகப்பெரிய நகராட்சியான திருவனந்தபுரம் கார்ப்பரேஷனின் இளைய மேயராக மார்க்சிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 21 வயதான ஆர்யா ராஜேந்திரன நேற்று முன்தினம் பதவியேற்றார்.

இளம் மேயருக்கு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வாழ்த்து தெரிவித்துள்ளார். திருவனந்தபுரம் நகரின் மேயராக ஆர்யா பதவி ஏற்றுக்கொண்டமைக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக நாமல் ராஜபக்ஷ தனது

06

## மைத்திரிபால தலைமையில் சு.க. மத்திய குழு இன்று கூடுகிறது



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு இன்று கூடுகிறது. கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் மத்திய செயற்குழு கூட்டம் நடைபெறும்.

இதன்போது கட்சியின் மறுசீரமைப்பு குறித்தும் எதிர்கால அரசியல் செயற்பாடுகள் குறித்தும் ஆராயப்படவுள்ளது.

### கொரோனா வைரஸ் மரணங்கள்;

## தகனம் செய்யும் நடைமுறையில் எவ்வித மாற்றமும் கிடையாது



### சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

லோரன்ஸ் செல்வநாயகம்

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஏற்படும் மரணங்களின் போது சடலங்களை நல்லடக்கம் செய்வதற்கு சுகாதார அமைச்சினால் எந்த அனுமதியும் இதுவரை வழங்கப்படவில்லையென சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மேற்படி சடலங்களை தகனம் செய்வது தொடர்பான சுகாதார அமைச்சின் தீர்மானங்களில் எந்த மாற்றமும் கிடையாதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சமூக வலைத்தளங்களில் மேற்படி விவகாரம் தொடர்பில் பல்வேறு பிரசாரங்கள்

06

### மேல் மாகாணத்திலிருந்து வெளியேறுவோருக்கான

## அன்டிஜன் பரிசோதனைகள் ஜனவரி 05 வரை தொடரும்



லோரன்ஸ் செல்வநாயகம்

மேல் மாகாணத்திலிருந்து வெளிப் பிரதேசங்களுக்கு செல்லும் நபர்களுக்கு மேற்கொள்ளப்பட்டுவரும் அன்டிஜன் பரிசோதனைகளுக்கமைய இது வரையில் 61 பேருக்கு கொவிட்19 வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,.. மேல் மாகாணத்திலிருந்து வெளிப் பிரதேசங்களுக்கு செல்லும் நபர்களுக்கான அன்டிஜன் பரிசோதனை கள்

06

## ஐ.ம.சக்தியின் உபதலைவராக இம்தியாஸ்;தவிசாளராக கபீர்





ஐக்கிய மக்கள் சக்தியில் 6 சிரேஷ்ட உப தலைவர்களையும், 5 உப தலைவர்களையும் நியமிப்பதற்கு கட்சி தீர்மானித்துள்ளது.

கட்சியின் புதிய யாப்பின் பிரகாரமே இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.இதன்படி சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரத்ன, சரத் பொன்சேகா, குமார வெல்கம, தலதா அத்துகோரல

06

### மேல் மாகாணத்திலிருந்து வெளியேறியவர்களால்

## பல மாவட்டங்களிலும் கொரோனா தொற்று அதிகரிக்க வாய்ப்பு

### பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

THE PUBLIC HEALTH INSPECTOR'S UNION OF SRI LANKA
ශ්‍රී ලංකා මහජන සෞඛ්‍ය පරීක්ෂකවරුන්ගේ සංගමය
இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம்

பண்டிகை காலங்களில் மேல்மாகாணத்திலிருந்து வெளியேறியவர்களில் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதால் புதிய பகுதிகளில் கொரோனா வைரஸ் கொத்தணிகள் உருவாகும் ஆபத்துள்ளது என பொதுசுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. மத்திய மாகாணம், கிழக்கு மாகாணம், வடமேல் மாகாணம் போன்ற பகுதிகளில் புதிய நோயாளர்கள்

06

## கட்சி தொடங்கும் எண்ணம் இல்லையென ரஜினி அறிவிப்பு

### ட்விட்டரில் தனது கவலையை வெளியிட்டார்